# 9

***சபை:***

# இதன் அடையாளம்

## இதன் நிலைத்த தன்மை

1. ***சபையின் தொடர்ச்சியான வெற்றி குறித்து இயேசு கூறியது என்ன (மத். 16:18)?***
2. ***சபையின் மூலம் அவரது தொடர்ச்சியான மகிமை பற்றிய விஷயம் என்ன (எபே. 3:21)?***
3. ***இராஜ்யத்தின் நிரந்தரத் தன்மை பற்றிப் பவுல் எவ்வாறு உரைத்தார் (எபி. 12:28)?***
4. ***இராஜ்யத்தின் அழிவற்ற தன்மை பற்றித் தானியேல் என்ன கூறினார் (தானி. 2:44)?***
5. ***சபையின் நிலைத்த தன்மை மற்றும் சபையின் தொடரொழுங்கு முறை ஆகியவற்றிற்கிடையே வேறுபாடுகளைக் கூறவும்.*** *சபையானது ஒருக்காலும் மக்களின்றி விடப்படாது, (மத். 16:18) து காலங்களின் முடிவு வரையில் விசுவாசமுள்ள உறுப்பினர்கள் எப்பொழுதும் இருப்பார்கள் என்று வாக்குறுதி அளித்தார்; இது சபையின் நிலைத்த தன்மையாக உள்ளது. தொடர்ச்சி: "நிலைநாட்டப்பட்ட சில விதிகளின்படி பின்பற்ற நபர்கள் அல்லது பொருள்களின் வரிசை; அரசர்களின் தொடர்ச்சி என்ற வகையில்." கோட்பாடு இவ்வாறுள்ளது: கிறிஸ்துவின் நாட்களில் இருந்து தற்காலம் வரையில் விசுவாசம் மற்றும் ஒழுங்கு முறையில் உடைக்க முடியாத சங்கிலித் தொடர் போலச் சபைகள் இருந்து வருகின்றன. இது பலமான தவறாக உள்ளது.*

## சபை எவ்விதம் அடையாளப்படுத்தப்படலாம்

1. ***கட்டியவரால். சபையைக் கட்டியவர் யார் (மத். 16:18)?***
   *குறிப்பு: பாடம் 11ல் இருந்து எல்லா நாமகரணக் கூட்டங்களின் ஆதார மூலங்களையும் சுட்டிக் காண்பிக்கவும். புதிய ஏற்பாட்டு சபை இவ்விதமான தொடக்கத்தைப் பெற்றிருந்ததில்லை என்று காண்பிக்கவும்.*
2. ***நிலை நாட்டப்பட்ட எண்ணிக்கையினால். தெய்வீகத் தோற்றம் கொண்டவை எத்தனை (மத். 16:18)?***
   - *அ. எத்தனை சரீரங்கள் உள்ளன (எபே. 4:4அ)?*
   - *ஆ. ஆனால் இந்த "ஒரே சரீரம்" என்பது என்ன (எபே. 1:22ஆ, 23அ; கொலோ. 1:18அ)?*

*(1.) புதிய ஏற்பாட்டின் உள்ளூர் சபைக் குழுமங்கள் பல இதை மறுக்கின்றனவா?*

*(2.) சபையின் தெய்வீகத் தோற்றத்திற்கான "அவசியத்தை" ாண்பிக்கவும் (சங். 127:1அ; மத். 15:13).*

***3. அஸ்திபாரத்தினால். அஸ்திபாரம் எது (மத். 16:16-18; 1 கொரி. 3:10, 11)?*** *ஒருவர் இரட்சிக்கப்பட, அஸ்திபாரத்தின் மேல் இருந்தாக ன்று காண்பிக்கவும் (1 கொரி. 3:10ஆ, 11).*

***4. கட்டிடம் உள்ள இடத்தினால். சபை எங்கு கட்டப்பட்டது (ஏசா. 2:2, 3; சக. 1:16)?***

*அ. தொடங்கும் இடம் பற்றி இயேசு கூறியது என்ன (லூக். 24:47, 49)?*

*ஆ. தொடக்கம் பற்றிப் பேதுரு கூறியது என்ன (அப். 11:15)?*

***5. திறவுகோலைப் பயன்படுத்திய ஒருவரால். திறவுகோலைப் பயன்படுத்த வேண்டியிருந்தவர் யார் (மத். 16:18, 19)?***

*அ. அவர் எப்பொழுது திறவுகோலைப் பயன்படுத்தினார் (அப். 2:1, 37)?*

*ஆ. எல்லார் மீதும் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் யாவை (அப். 2:36, 38)?*

***6. கடைப்பிடித்த நாளினால். சபை எந்த நாளில் அப்பம் பிட்டது (அப். 20:7அ)?***

*அ. கிறிஸ்து எந்த நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தார் (லூக். 24:1-3, 6)?*

*ஆ. சீஷர்கள் எந்த நாளில் (காணிக்கை) சேர்த்தனர் (1 கொரி. 16:2)?*

*இ. யோவான் எந்த நாளில் "ஆவிக்குள்ளானார்" (வெளி. 1:10அ)?*

*ஈ. இயேசு எந்த நாளில் தம்முடையவர்களுக்குக் காட்சியளித்தார் (மாற். 16:9; யோவா. 20:1ஆ, 16, 19)?*

***7. கர்த்தருடைய பந்தி எத்தனை நாட்களுக்கொருமுறை நடத்தப்படுகிறது என்பதினால். அது எவ்வளவு நாட்களுக்கு ஒருமுறை கடைப்பிடிக்கப்பட்டது (அப். 20:7அ)?***

*அ. தொடக்க கால சபையார் எதில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2:42)?*

*ஆ. கொரிந்தியர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள் யாவை (1 கொரி. 11:23-26)? ாதாந்திர, காலாண்டு மற்றும் அரையாண்டுக் கடைப் பிடிப்பாளர்கள் பற்றிய விஷயம் என்ன?*

***8. சபைக்குப் பயன்படுத்தப்பட்ட பெயர்களினால். இந்தப் பெயர்களில் ஒன்றைத் தரவும் (1 கொரி. 1:2அ)?***

*அ. சபையை அமைக்கின்ற இரு சொற்றொடர்களை தரவும் (அப். 20:28ஆ; 1 தீமோ. 3:15ஆ)?*

*ஆ. மற்ற மூன்று சொற்றொடர்களைத் தரவும் (கொலோ. 1:18அ; எபி. 12:23அ; ரோமர் 16:16ஆ). மற்ற பெயர்கள் சூட்டப்படக் கூடாது என்பதைக் காண்பிக்கவும் (கொலோ. 3:17; வெளி. 22:18, 19)?*

***9. உறுப்பினர்களுக்குப் பயன்படுத்தப்படும் பெயர்களால். பொதுவான ஒரு பெயரைத் தரவும் (அப். 5:14).***

*அ. பயன்படுத்தப்பட்ட மற்ற மூன்று பெயர்களைக் குறிப்பிடவும் (அப். 6:7அ; ரோமர் 8:17அ; 1 கொரி. 1:2ஆ).*

*ஆ. பயன்படுத்தப்பட்ட மூன்று சொற்றொடர்களைக் குறிப்பிடவும் (எபே. 6:6ஆ; எபி. 13:1; அப். 11:26).*

*இ. இப்பொழுது எல்லாவற்றிற்கும் மேலான பெயரைத் தரவும் (அப். 11:26; கொலோ. 1:18இ).*

***10. இரத்தத்துடன் இதற்குள்ள தொடர்பினால். சபை எவ்வாறு கிரயம் கொள்ளப்பட்டது (அப். 20:28)?***

*எது இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை (எபி. 9:22)?*

***11. இதன் ஒரே வழிகாட்டி நூலினால். இந்த வழிகாட்டி நூல் எது (2 தீமோ. 3:16, 17)?***

*வேறு எந்த புத்தகத்தினாலும் ஆளப்படக் கூடிய வேறு எந்த சபையையும் பற்றிய விஷயம் என்ன?*

***12. இதன் ஊழியத்துவ உற்சாகத்தினால். இதன் சுவிசேஷத் திட்டம் என்னவாக இருந்தது (அப். 1:8; 8:1, 4)?***

*அ. இந்த ஊழியத்தை சபை எவ்வாறு நிறைவேற்றியது (கொலோ. 1:23)?*

*ஆ. ஊழியத்திற்கெதிரான சபை எதுவும் வேத வசனத்தின் படியானதாக இருக்க முடியுமா (மாற். 16:15, 16)?*